**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 , திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>முன்னிலை</u> : திரு.S.கோவேந்தன், B.A., LL.B., (Hons).,**

நீதித்துறை நடுவர் எண்.2,

திருப்பத்தூர்.

**2026–ம் ஆண்டு மே மாதம் 22–ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.20/2018</u>**

CNR.NO,TNTU02–000424–2018

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
திருப்பத்தூர் கிராமிய காவல் நிலையம்,
திருப்பத்தூர்.
குற்ற எண்.151/2017 ...... புகார்தாரர்

// எதிரிடை//

திருமலை, த/பெ.அருணாச்சாலம் .....குற்றம் சாட்டப்பட்டவர்

(குற்றம்சாட்டப்பட்டவர் வழக்கறிஞர் மூலம் வழக்கை எதிர்கொண்டார்)

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சி.சி.எண். 20/2018 |
| 2 | காவல் நிலையம் மற்றும் குற்ற எண் | திருப்பத்தூர்<br>கிராமியகாவல் நிலையம்,<br>குற்ற எண்.151/2017 |
| 3 | குற்றம் சாட்டப்பட்டது | இ.த.ச.பிரிவு.294(b), 324 |
| 4 | குற்றம் முன்னிலைப்படுத்தப்பட்டது | இ.த.ச.பிரிவு.294(b), 324 |
| குற்றம் சாட்டப்பட்டவரின் விவரம் | | |
| 5 | பெயர் | திருமலை |
| 6 | தந்தை பெயர் | த/பெ.அருணாச்சாலம் |
| 7 | முகவரி | அண்ணா நகர், மடவாளம் அஞ்சல், திருப்பத்தூர். |
| 8 | வயது | – |
| நாள் | | |
| 9 | குற்ற நிகழ்வு | 19.03.2017 |
| 10 | புகார் | 20.03.2017 |
| 11 | கைது செய்யப்பட்ட நாள் | 20.03.2017 |



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

<table>
<tr><td>12</td><td>எதிரி பிணையில் வந்த நாள்</td><td colspan="3">23.03.2017</td></tr>
<tr><td>13</td><td>வழக்கு துவங்கிய நாள்</td><td colspan="3">07.11.2025</td></tr>
<tr><td>14</td><td>விசாரணை முடிக்கப்பட்ட நாள்</td><td colspan="3">22.05.2026</td></tr>
<tr><td>15</td><td>தீர்ப்பு</td><td colspan="3">இ.த.ச.பிரிவு.324–ன் கீழ் குற்றவாளி</td></tr>
<tr><td>16</td><td>தாமதத்திற்குரிய காரணம்</td><td colspan="3">–</td></tr>
<tr><td colspan="5">வழக்கின் நிலை</td></tr>
<tr><td>17</td><td>பிணைக்காலம்</td><td colspan="3">––</td></tr>
<tr><td>18</td><td>குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள்</td><td colspan="3">25.01.2018</td></tr>
<tr><td>19</td><td>பிரிவு 240 கு.ந.மு.வி<br>(முதல் கேள்வி)</td><td colspan="3">28.02.2019</td></tr>
<tr><td>20</td><td>பல்வகை மனுவின் மீது<br>இந்நீதிமன்றத்தின் உத்திரவு</td><td colspan="3">–</td></tr>
<tr><td rowspan="7">21</td><td rowspan="7">முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணைs</td><td>அரசு தரப்பு சாட்சி</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா. 1</td><td>07.11.2025</td><td>07.11.2025</td></tr>
<tr><td>அ.சா. 2</td><td>26.02.2026</td><td>26.02.2026</td></tr>
<tr><td>அ.சா. 3</td><td>26.02.2026</td><td>–</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>05.03.2026</td><td>05.03.2026</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>12.03.2026</td><td>12.03.2026</td></tr>
<tr><td>அ.சா.6</td><td>11.05.2026</td><td>11.05.2026</td></tr>
<tr><td>22</td><td>பிரிவு 313 கு.ந.மு.வி(வினாவல்)</td><td colspan="3">13.05.2026</td></tr>
<tr><td>23</td><td>தலைமறைவு எதிரிகளின் விவரங்கள்/அவரதுஆஜர்/ஒப்படைப்பு</td><td colspan="3">இல்லை</td></tr>
<tr><td>24</td><td>மேலமை நீதிமன்றங்களால் பிறப்பிக்கபட்ட நிறுத்திவைப்பு உத்தரவு ஏதேனும்</td><td colspan="3">இல்லை</td></tr>
</table>



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

இவ்வழக்கு கடந்த 08.03.2018 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 22.05.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசுக்காக கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்களும், எதிரிக்கு கற்றறிந்த வழக்கறிஞர் திரு.சுரேஷ் அவர்களும், ஆஜராகியிருக்க, ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலினை செய்ததின் பேரில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

**(1)** இவ்வழக்கில் புகார்தாரர் கடந்த 19.03.2017–ஆம் தேதி பகல் சுமார் 3.30 மணிக்கு திருப்பத்தூர் கிராமிய காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மாடப்பள்ளி, அண்ணா நகரில் தனது வீட்டில் இருந்தபோது, அங்கு வந்த எதிரி வீண் தகராறு செய்து புகார்தாரரைப் பாரத்து அசிங்கமாகத் திட்டியதோடு, புகார்தாரரின் இடது முழங்கை மடிப்பிலும், இடது பக்க தாடையிலும் பேனா கத்தியால் கிழித்து "சொற்பகயாம்" ஏற்படுத்தியதாலும், எதிரி மீது இ.த.ச.பிரிவுகள்.294(b), 324–இன்படி இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**(2)** இறுதி அறிக்கையை இந்நீதிமன்றம் கோப்புக்கு எடுத்துக்கொண்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி, எதிரி ஆஜரானவுடன் நகல்கள் வழங்கப்பட்டு, குற்றச்சாட்டு வனையப்பட்டு எதிரியிடம் வினவியபோது, எதிரி அதை மறுத்ததால், அரசு தரப்பில் சாட்சிகளை முன்னிலைப்படுத்த இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது.

**(3)** அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.6** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9** வரையிலான ஆவணங்களும், அ.சா.பொ.1–ம் வழக்கிற்கு ஆதாரங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**(4)** அரசு தரப்பு சாட்சிகள் முடிவுற்ற பிறகு, எதிரிக்கு எதிராக உள்ள சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b)–ன்கீழ் வினவியபோது எதிரி



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

"பொய் சாட்சியம்" என்றும், அவர் தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

**<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

**(5)** அ.சா.6 காவல் ஆய்வாளர் பாரதி தனது சாட்சியத்தில், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமைக் காவலர் திரு.செல்வம் கடந்த 19.03.2013 அன்று அ.சா.1 மதுரைவீரன் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருப்பதாகக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு சென்றபோது, அவர் மேல்சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சென்றுள்ளதையறிந்து அங்கு சென்று, அ.சா.1–ஐ விசாரித்து அவரிடம் அ.சா.ஆ.1 புகார்வாக்குமூலம் பெற்று அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, பின்னர் இவ்வழக்கை புலன் விசாரணைக்காகப் பெற்றுக்கொண்ட திருமதி.நிர்மலா தனது புலன்விசாரணையின்போது பணியிடமாறுதலில் சென்றதால், தான் மேற்கொண்டு இவ்வழக்கில் புலன்விசாரணையை முடித்து, எதிரி மீது இ.த.ச.பிரிவுகள்.294(b), 324–ன் கீழ் இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

**<u>இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை என்னவெனில், அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான இந்திய தண்டனை சட்ட பிரிவுகள் 294(b), 324 of IPC – இன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டு உள்ளதா? இல்லையா ? என்பதே ஆகும்.</u>**

**<u>அ.சா.1–ன் சாட்சியத்தை பரிசீலிக்கையில்,</u>**

**(6)** அ.சா.1 தனது சாட்சியத்தில் கடந்த 19.03.2017 அன்று மாலை 03.30 மணியளவில் தனது அண்ணன் வீட்டின் அருகே சமையல் செலவு வாங்க சென்றபோது, ஆஜர் எதிரி திருமலை ரூ.500/– வேண்டுமென்று கேட்டபோது, தான் இல்லை என்று சொல்லிவிட்டு கடைக்குச் சென்றுவிட்டு



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

திரும்பவரும்போது, தனது கையில் பொருட்கள் அடங்கிய பெட்டி இருந்தபோது, எதிரி தன்னை அசிங்கமாகத்திட்டி இதற்கெல்லாம் காசு இருக்கிறது நான் கேட்டால் பணத்தை தரமாட்டியா" என்று கேட்டு, பாக்கெட்டில் இருந்த கத்தியை எடுத்து முதலில் தனது கழுத்தின் இடது பக்கத்திலும், இடது கை முழங்கைக்கு மேலும் கிழித்ததில் இரத்த காயம் ஏற்பட்டதாகவும், தான் வலி தாங்க முடியாமல் கத்தியதால் அங்கிருந்த விக்ரம் என்பவர் தன்னை திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் அழைத்துச் சென்று, அங்கு முதலுதவி அளிக்கப்பட்டு மேல்சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து, அங்கு 1 வாரம் சிகிச்சையில் இருந்ததாகவும், காயம் ஆழமாக இருந்ததால், பிளாஸ்டிக் சர்ஜரி செய்யவேண்டிவரும் என்று கூறினார்கள் என்றும், தான் தொடர்ந்து மூன்று நான்கு நாட்கள் சிகிச்சைக்கு சென்றுவந்ததாகவும், சிகிச்சையிலிருந்தபோது, திருப்பத்தூர் கிராமிய காவல் நிலைய போலீசார் மருத்துவமனைக்கு வந்து தன்னை விசாரித்தனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இவரின் மூலம் புகார்வாக்குமூலம் அ.சா.ஆ.1–ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

*(7)* மாண்பமை உச்ச நீதிமன்றம்*, N.S. Madhanagopal & Anr. vs. K.Lalitha (2022 INSC 1323) என்ற வழக்கில், "Mere usage of abusive words do not constitute an offence u/s. 294(b) of Indian penal code. Instead, there must be further proof that the obscene act or utterance was made to the annoyance of others."* என்று தெளிவுபடுத்தி உள்ளதால்,

**(8)** இந்த வழக்கில் இ.த.ச.பிரிவு.294(b)–இன் சாராம்சங்கள் உள்ளடக்கப்படவில்லை. ஆனால், அ,சா.1–ன் சாட்சியத்தில் இ.த.ச.பிரிவு.324–ன் சாரம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

<u>**அ.சா.1–ன் காயச்சான்றிதழைப் பரிசீலிக்கையில்,**</u>

**(9)** அ.சா.1 மதுரைவீரனுக்கு சிகிச்சை அளித்த அ.சா.4 மருத்துவர் திரு.செந்தில்குமரன் தனது சாட்சியத்தில், கடந்த 19.03.2017 அன்று மாலை 05.36 மணியளவில் மதுரைவீரன் த.பெ. மகேந்திரன் என்பவரை சிகிச்சைக்காக அழைத்து வந்தபோது அவரை விசாரித்ததில் அவரை தெரிந்த ஒரு ஆண் நபர் கத்தியால் தாக்கியதாக கூறியதாகவும், அவரை பரிசோதித்தபோது, அவருக்கு இடது முழங்கையில் 15*3*1 செ.மீ. அளவில் வெட்டுக்காயமும், 15*2*1 செ.மீ. அளவில் இடதுப்பக்க தாடையில் ஒரு வெட்டுக்காயமும் இருந்ததாகவும், அவருக்கு இரத்தக்குழாயில் வெட்டுக்காயம் ஏற்பட்டிருக்கலாம் என்று தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்றும், தருமபுரி அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட காயச்சான்றின்படி அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று காயச்சான்று வழங்கினேன் என்றும், அந்த விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ.4–ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**(10)** சம்பவம் நடந்த பிறகு, அ.சா.1 உடனடியாக சந்தித்த நபரான அ.சா.7 மருத்துவரிடம், ஒரு ஆண் நபர் தன்னை கத்தியால் தாக்கியதாகக் குறிப்பிட்டுள்ளதால், இவரது சாட்சியமானது சம்பவம் நடந்த விதம் குறித்து, அ.சா.1–ன் சாட்சியத்தை உறுதி செய்யும் விதமாக உள்ளது.

<u>**இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2–ன் சாட்சியத்தைப் பரிசீலிக்கையில்,**</u>

**(11)** கடந்த 19.03.2017 அன்று மாலை 03.00 – 04.00 மணியளவில் தான் தன்னுடைய பெரியப்பா வீட்டிடம் இருந்தபோது தன்னுடைய பெரியப்பா மகன் மதுரைவீரன் என்பவருக்கும், திருமலைக்கும் வாய்த்தகராறும், சண்டையும் ஏற்பட்டதாகவும், எதிரியானவர் மதுரை வீரனை அசிங்கமான வார்த்தைகளால் திட்டியதால், ஏன் இவ்வாறு திட்டுகிறாய் என்று மதுரைவீரன் கேட்டதாகவும்,



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

அப்போது எதிரி பாக்கெட்டில் வைத்திருந்த பேனா கத்தியால் மதுரை வீரனின் இடது முழங்கையிலும், இடது பக்க கழுத்திலும் கிழித்து விட்டார் என்றும், பின்னர் தான் தன்னுடைய இருசக்கர வாகனத்தில் மதுரை வீரனை திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சேர்த்ததாகவும், பின்னர் மேல்சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனையில் அவரை சேர்த்தனர் என்றும், ஆஜர் எதிரி தங்கள் ஊரைச் சார்ந்தவர்தான், அவரைத் தெரியும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இவரது சாட்சியமானது அ.சா.1-ன் சாட்சியத்தை உறுதியூட்டும் வகையில் அமைந்துள்ளது.

**இவ்வழக்கின் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.3-ன் சாட்சியத்தைப் பரிசீலிக்கையில்,**

**(12)** அ.சா.3 டைய (எ) பெருமாள் தனது சாட்சியத்தில், இவ்வழக்கில் பார்வை மகஜர் (2-வது சாட்சி கையொப்பம் - அ.சா.ஆ.2) மற்றும் (அ.சா.ஆ.8) கைப்பற்றுதல் மகஜர் (2-வது சாட்சி கையொப்பம் - அ.சா.ஆ.3) சாட்சியாக இருந்து கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

**(13)** அரசு தரப்பில் இவரை பகுதி பிறழ் சாட்சியாக அனுமதிக்கக்கோரி குறுக்குவிசாரணை செய்தபோது, அவர் போலீசார் சம்பவ இடத்தைப் தனது முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயார் செய்தது குறித்தும், சம்பவ இடத்திலிருந்த வழக்கு சொத்து பேனாக்கத்தியை கைப்பற்றியது குறித்தும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக பதில் அளித்துள்ளதால், போலீசார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரித்ததும், வழக்கு சொத்தைக் கைப்பற்றியதும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

**இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அ.சா.5 மற்றும் அ.சா.6-ன் சாட்சியங்களைப் பரிசீலிக்கையில்,**

**(14)** இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகள் அ.சா.5 திருமதி.நிர்மலா, இவ்வழக்கில் (அ.சா.ஆ.5) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சம்பவ



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

இடம் சென்று (அ.சா.ஆ.6) பார்வை மகஜர், (அ.சா.ஆ.7) மாதிரி வரைபடம், (அ.சா.ஆ–8) கைப்பற்றுதல் மகஜர், (அ.சா.ஆ.9) படிவம் 91 தயார் செய்து, அ.சா.1–ற்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரித்து (அ.சா.ஆ.4) காயச்சான்றிதழ் பெற்று, பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தது குறித்தும், பின்னர் இவ்வழக்கை மேல்விசாரணைக்காக எடுத்துக்கொண்ட அ.சா.6 காவல் உதவி ஆய்வாளர் திருமதி.பாரதி தனது சாட்சியத்தில் இவ்வழக்கில் அ.சா.1–ற்கு சிகிச்சையிளித்த மருத்துவரையும், பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களையும் விசாரித்து, பின்னர் தனது புலன்விசாரணையை முடித்து சாட்சிகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் எதிரி மீது இ.த.ச.பிரிவு.294(b), 324–ன் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளனர்.

**பகுப்பாய்வு :**

**(15)** இவ்வழக்கில் எதிரிக்கு எதிராக இ.த.ச.பிரிவு.294(b), 324–ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது.

**எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவு.294(b) குறித்துப் பரிசீலிக்கையில்,**

**(16)** மேற்குறிப்பிடப்பட்ட மாண்பமை உச்ச நீதிமன்றத்தின், *N.S. Madhanagopal & Anr. vs. K.Lalitha (2022 INSC 1323)* என்ற வழக்கின் தீர்ப்பின்படி, இந்த வழக்கில் இ.த.ச.பிரிவு.294(b)–இன் சாராம்சங்கள் உள்ளடக்கப்படாததால், இக்குற்றம் எதிரிக்கு எதிராக நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவு.324–இன் கீழான குற்றச்சாட்டு குறித்து பரிசீலிக்கையில்,**

**(17)** இவ்வழக்கின் எதிரி தாக்கியதில் அ.சா.1 காயமடைந்ததை நிரூபிக்கும் வகையில், கண்ணுற்ற சாட்சியான அ.சா.2–ன் சாட்சியம் அமைந்துள்ளதாலும்,



JUDICIAL MAGISTRATE NO.II
KOVENDHAN S
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

அ.சா.1–ற்கு ஏற்பட்ட காயமானது அ.சா.4 மருத்துவரின் சாட்சியம் மற்றும் அ.சா.ஆ.4 காயச்சான்றிதழ் வாயிலாக நிரூபிக்கப்பட்டுள்ளதாலும், எதிரிக்கு எதிரான இ.த.ச.பிரிவு.324–ன் கீழான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**முடிவாக,**

**(18)** எதிரியின் மீதான இ.த.ச.பிரிவுகள்.294(b)–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படாததால், எதிரியை மேற்படி குற்றச்சாட்டின்கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்ப்பளித்து, கு.வி.மு.ச.பிரிவு.248(1)–இன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**(19)** எதிரியின் மீதான இ.த.ச.324–இன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நீரூபிக்கப்பட்டுள்ளதால், எதிரிக்கு வழங்கவிருக்கும் தண்டனையைப் பொறுத்து குற்ற விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு.248(2)–இன் கீழ் வினவியபோது, எதிரி கீழ்கண்டவாறு பதில் அளித்தார்,

**"நான் எந்த தவறும் செய்யவில்லை"**

**(20)** எதிரியின் நடத்தை மற்றும் முன் வழக்குகளை பற்றி தெரிந்து கொள்வதற்காக இந்நீதிமன்றம் திருப்பத்தூர் நன்னடத்தை அலுவலரை அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டு, அதன்படி அவர் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் இந்த வழக்கின் எதிரி திருமலை மீது முன் வழக்குகள் இல்லை என்றும், அவர் திருந்தி நல்ல குடிமகனாக சமுதாயத்திற்கு எந்த தீங்கும் இன்றி வாழ்வதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நன்னடத்தை அலுவலர் எதிரியை மன்னித்து குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டப்பிரிவு 4–இன் கீழ் விடுதலை செய்யலாம்


KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

எனவும், சட்டப்பிரிவு 4(3)–இன் கீழ் நன்னடத்தை அலுவலரின் மேற்பார்வையில் வைக்கலாம் எனவும் பரிந்துரைத்துள்ளார். அந்த பரிந்துரையை இந்நீதிமன்றம் ஏற்றுக் கொள்கிறது.

(21) எதிரி திருமலையை இந்திய தண்டனைச் சட்ட பிரிவு.324–இன் கீழ் குற்றவாளி என்று தீர்ப்பளித்து, எதிரி தண்டனையை பொறுத்து வழங்கிய பதில் மற்றும் நன்னடத்தை அலுவலரின் அறிக்கை, எதிரியின் வயது அவரது குடும்ப சூழ்நிலை ஆகியவற்றை கவனத்தில் கொண்டு எதிரியை நன்னடத்தைச் சட்டப்பிரிவு 4–இன் கீழ் நிபந்தனையோடு ரூபாய்.10,000/– ற்கு இரண்டு ஜாமின்தாருடன் பிணைப் பத்திரம் எழுதித்தரவேண்டும் என்றும், இன்றிலிருந்து ஒரு வருடகாலம் திருப்பத்தூர் நன்னடத்தை அலுவலரின் மேற்பார்வையில் நன்னடத்தை காக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது.

(22) மேலும், எதிரி மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாதத்தின் முதல் தேதியில் திருப்பத்தூர் நன்னடத்தை அலுவலரின் முன்பு ஒரு வருடம் வரை ஆஜராக வேண்டும் என்றும், மேற்படி ஓராண்டு காலத்தில் எதிரி வேறு ஏதாவது குற்ற செயல்களில் ஈடுபட்டால் இந்த வழக்கு மீண்டும் திறக்கப்பட்டு எதிரிக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தண்டனை வழங்கப்படும் என்றும், நிபந்தனைகளை முழுமையாக பின்பற்றும் பட்சத்தில் எதிரிக்கு நன்னடத்தைச் சட்டப்பிரிவு 12–இன் கீழான நன்மைகளை அடைய தகுதியடைவார் என்றும் உத்தரவிடப்படுகிறது.

(23) இவ்வழக்கின் **C.P.No.31/2018**–ல் கண்ட சான்றுப்பொருளான **ஸ்டீலால் ஆன பேனா கத்தி** ஒன்றை மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**(24)** இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்குச் சொல்லச்சொல்ல, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு திருத்தங்களுக்குப் பிறகு 2026-ம் வருடம் மே திங்கள் 22-ஆம் நாளான இன்று என்னால் அவையறியப் பகரப்பட்டது.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**நீதித்துறை நடுவர் எண்.II**
**திருப்பத்தூர்.**

**<u>அரசு தரப்பு சாட்சிகள் :</u>**

| **அரசு தரப்பு சாட்சிகள்** | **சாட்சியின் பெயர்** | **சாட்சியின் வகை** |
|---|---|---|
| **அ.சா.1** | திரு.மதுரைவீரன் த/பெ.மகேந்திரன் | புகார்தாரர் |
| **அ.சா.2** | திரு.விக்ரம் த/பெ.ஞானசேகர் | கண்ணுற்றசாட்சி |
| **அ.சா.3** | திரு.டைய (எ) பெருமாள் த/பெ.காளி | பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |
| **அ.சா.4** | திரு.செந்தில்குமரன் த/பெ.ராமலிங்கம் (மருத்துவர்) | மருத்துவ சாட்சி |
| **அ.சா.5** | திருமதி.நிர்மலா க/பெ.கமலக்கண்ணன் (காவல் ஆய்வாளர்) | புலன்விசாரணை அதிகாரி |
| **அ.சா.6** | திருமதி. பாரதி க/பெ.குமார் (காவல் உதவி ஆய்வாளர்) | புலன்விசாரணை அதிகாரி |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| சான்றாவண எண். | சான்றாவணத்தின் வகை | சான்றளித்தவர்/ மெய்ப்பித்தவர் |
|---|---|---|
| **அ.சா.ஆ.1** | புகார் வாக்குமூலம் | அ.சா.1 |
| **அ.சா.ஆ.2** | பார்வை மகஜரில் உள்ள 2–வது கையொப்பம் | அ.சா.3 |
| **அ.சா.ஆ.3** | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2–வது சாட்சி கையொப்பம் | அ.சா.3 |
| **அ.சா.ஆ.4** | காயச்சான்றிதழ் | அ.சா.4 |
| **அ.சா.ஆ.5** | முதல் தகவல் அறிக்கை | அ.சா.5 |
| **அ.சா.ஆ.6** | பார்வை மகஜர் | அ.சா.5 |
| **அ.சா.ஆ.7** | மாதிரி வரைபடம் | அ.சா.5 |
| **அ.சா.ஆ.8** | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.5 |
| **அ.சா.ஆ.9** | படிவம் 91 | அ.சா.5 |

**<u>அரசு தரப்பு சான்று பொருள் – CP.31/2018</u>**

| சான்றுப் பொருள் எண். | சான்றுப்பொருள் | சான்றளித்தவர்/ மெய்ப்பித்தவர் |
|---|---|---|
| 1 | ஸ்டீலால் ஆன பேனா கத்தி | அ.சா.1 |

**<u>எதிரி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள்</u> – இல்லை**

**<u>எதிரி தரப்பு சான்று பொருள் –</u> இல்லை**

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**திருப்பத்தூர்.**

**<u>பின்குறிப்பு</u>**

1. எந்த சாட்சியும் 3 கேட்புரைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. விசாரணை சமயம் எதிரி பிணையில் இருந்தார்.
3. வழக்கு முடிவு குறித்து சம்பந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
4. வழக்குச் சொத்து பற்றிய உத்தரவு வழக்குச் சொத்துக்கள் பதிவேட்டில் பதிய உத்தரவிடப்பட்டது,
5. இந்த தீர்ப்பின் நகல் திருப்பத்தூர் நன்னடத்தை அலுவலரின் கவனத்திற்காக அனுப்பிவைக்கப்படுகிறது.

**//உண்மை நகல்//**

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**நீதித்துறை நடுவர் எண்.II**
**திருப்பத்தூர்.**